**இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்க சபை - 2023**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்க சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று நிதிசெயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்க சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும்

எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி

  உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இற்கு இணங்க அரச மானியங்கள் வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், முன்னைய ஆண்டுகளின் போது கிடைத்திருந்த 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்படும் ரூபா 40,215,607 இற்கான அரச மானியங்கள் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 ஆண்டின் நியமத்தின் படி கணக்குப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நியமத்திற்கு இணங்க அரச மானியங்கள் வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு இலக்கம் 19 இற்கு முரணாக இயற்கணிப்பு பெறுமதி மதிப்பீட்டு முறையை கடைபிடிக்காமல் ரூபா 12,859,335 இற்கான பணிக்கொடை ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் பெறுமதி மிகை / குறைவாக கணிக்கப்படக்கூடும். | இயற்கணிப்பு பெறுமதி மதிப்பீட்டு முறையின் படி பணிக்கொடையினை கணித்து நிதிக்கூற்றுக்களில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்திற்கு இணங்க இயற்கணிப்பு பெறுமதி மதிப்பீடு கணிக்கப்பட வேண்டும். |

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாசனை பொருட்கள் மசாலா விற்பனை சபையுடன் உடன்படிக்கையொன்றிற்கு அணுகாமல் கடன் அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 2,777,727 இற்கான பண்டங்களில் ரூபா 328,647 இற்கான பண்டங்கள் காலவதியாகி இருந்த போதிலும், இருப்புச் சேதத்திற்காக நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொண்டிருக்கவில்லை. | தெஹிவல விற்பனை நிலையத்தின் ரூபா 328,647 தொகை பெறுமதியான இந்த இருப்புக்கள் 2023.12.25 திகதியளவில் அதனை அழித்திருந்தமையால் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பௌதீக இருப்பு கணிப்பின் போது இந்த இருப்பின் பெறுமதி இறுதியிருப்பிற்கு எடுக்கப்படாமையால் இலாபம் சரியாக காட்டப்பட்டு கணக்குகள் தயாரிக்கும் போது இருப்புச் சேதம் என காட்டி இறுதி இருப்பிலிருந்து கழித்திருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர் காலத்தில் அவ்வாறு ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுப்பேன். | இருப்புச் சேதம் நிதிக்கூற்றுக்களுக்கு சீராக்கல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபையின் செயற்திட்ட செயற்பாட்டு வருமானம் ரூபா 196,445 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். 2024 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்கான வருமானம் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது ரூபா 1,805,492 தொகைக்கான | மீளாய்வு காலத்தேய்மானம் பெறுமதி செலவின் கீழ் கழித்து, கணக்குக் | காலத்தேய்மான பெறுமதி நிதிச் |

| | | |
|---|---|---|
| காலத்தேய்மானம் பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றில் தனியான ஒரு விடயம் என காட்டப்படாமல் மொழிபெயர்ப்பு, தொடர்பாடல், பயன்பாடுகள் மற்றும் ஏனைய சேவை செலவுகளில் இருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்தமையால் அந்தச் செலவு நிதிச் செயலாற்றல் கூற்றில் அதே பெறுமதியினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | குறிப்பு 21 இன் கீழ் அந்தச் செலவு வேறாக குறைவாக காட்டப்பட்டிருந்த போதிலும், எதிர் காலத்தில் நிதிச் செயலாற்றல் கூற்றில் செலவுகளின் கீழ் குறைக்காமல் வருமானத்தின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செயலாற்றல் கூற்றில் செலவுகளிலிருந்து கழித்து காட்டப்படக் கூடாது. |

## 1.6 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியிருக்காத பயறு மற்றும் உழுந்து இறக்குமதி செய்து வினியோகிக்கும் செயற்திட்டமொன்றிற்காக வெளித் தரப்பினர்களிடம் ரூபா 21,635,000 இற்கான வைப்புக்கள் பெற்றுக்கொண்டிருந்த போதிலும் குறிப்பிட்ட செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்காதது டன், தீர்க்கப்படாத ரூபா 9,515,000 இற்கான தொகை வைப்புக் கணக்கொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. | தேசிய உணவு மேம்பாட்டு சபைக்கு 2,250 மெ.தொன். பயறு மற்றும் 1,350 மெ.தொன் உழுந்து இறக்குமதி செய்வதற்கு விதித்திருந்த தடையை அகற்றி உழுந்து மற்றும் பயறு கிலோ ஒன்றிற்கு ரூபா 300 இற்கான வரித் தொகையின் கீழ் இறக்குமதி செய்வதற்காக 2023/08/17 திகதிய கௌரவ ஜனாதிபதி அவர்களினால் அதிவிஷேட வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டது. அதன்படி, சபையின் விலைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட இறக்குமதிச் செலவில் 3 சதவீத நிருவாக கட்டணமொன்று சபைக்கு கிடைப்பதனால் தொடர் நடவடிக்கை திட்டமிடப்பட்டது. எனினும், அதற்கான தடை இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரினால் அகற்றப்படாமையால் இறக்குமதி அலுவல்கள் மேற்கொள்ள முடியாமல் போனது. சில கம்பனிகள் விண்ணப்பித்து அவர்களின் பணத்தை மீளப்பெற்றதுடன், ஏனைய கம்பனிகளின் பணம் இதுவரை எமது பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. | தீர்க்கப்படாத வைப்புத்தொகைகளை குறிப்பிட்ட தரப்பினர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (அ) | நி.பி. 104(4) | 2018 ஆண்டில் அனுராதபுரம் உபுல்தெனிய களஞ்சியத்தில் ரூபா 4,094,596 தொகை பெறுமதியான சோயா அவரை காணாமல் போதல் தொடர்பாக முன்னைய தலைவர், பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் (தற்போது பிரதிப் பணிப்பாளர்), செயற்திட்ட உத்தியோகத்தர் ஆகியோருக்கு கூட்டாக பொறுப்பு சாட்டப்படுகின்றதென விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பிரதிப் பணிப்பாளருக்கு சம்பளம் இன்றி வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | 2018 ஆண்டில் அனுராதபுரம் உபுல்தெனிய களஞ்சியத்தில் 37,223 கி.கிராம் தொகை சோயா அவரை காணாமல் போனது தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு கொழும்பு நீதிவான் நீதிமன்றில் 2023.05.12 திகதி 91706/03/23 இலக்கத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தற்போதும் விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பொறுப்பான தரப்பினர்களிடம் நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | நி.பி. 571 (2) | 02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 76,220,010 தொகைக்கான திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 ஆண்டில் தற்போது நெல்னா பாம் தனியார் கம்பனி என்ற பெயரில் ரூபா 40,214 இற்னான தொகை தீர்க்கப்பட்டிருந்தது. டப்ளியூ.டீ.ஆர். சந்தன லால் குணவர்தன என்ற பெயரில் வைக்கப்பட்டிருந்த ரூபா 10,000 இற்கான வைப்பு புத்தல் சேதனப் பசளைச் செயற்திட்டம் தற்போதும் செயற்படுத்தப்பட்டு வருவதனால் அந்தத் தொகையை விடுவிக்க முடியாது. குளங்கள் செயற்திட்டத்திற்குரிய ரூபா 76,085,636 இற்கான தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய வைப்புக்களை | குளங்கள் செயற்திட்டத்திற்குரிய வைப்புத் தொகைகளுக்குரிய குளங்கள் புணரமைக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | விடுவிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் சபையின் நிதி விளைவுகள் ரூபா 59,970,688 இற்கான மிகையயொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் ரூபா 16,020,225 இற்கான மிகையொன்று காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 43,950,463 இற்கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது. அது வட்டி வருமானம் ரூபா 31,041,573 இனால் அதிகரித்தல் மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 33,917,153 இனால் அதிகரித்தல் மேற்கூறிய நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்காக பிரதானமாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் திறைசேரி / அமைச்சு மானியங்கள் 38 சதவீதத்தினால் குறைவடைதலும், ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் மற்றும் வட்டி வருமானங்கள் முறையே 314 மற்றும் 119 சதவீதங்களினால் அதிகரித்திருந்ததுடன், ஏனைய வருமானங்கள் 88.9 சதவீதத்தினால் குறைவடைதலும், ஊழியர் உழைப்பு செலவு வழங்கல் மற்றும் தேவைப்பாட்டுச் செலவுகள் முறையே 4.1 சதவீதத்தினால் மற்றும் 5.1 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. போக்குவரத்து தொடர்பாடல் பயன்படு மற்றும் ஏனைய செலவுகள் மற்றும் நிலையான சொத்துக்களின் திருத்த மற்றும் பராமரிப்புச் செலவுகள் முறையே 40.3 மற்றும் 82.8 தசவீதங்களினால் அதிகரித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சட்டத்தில் காட்டப்பட்டுள்ள குறிக்கோளொன்று அல்லாத குளங்களில் இருந்து மண் அகற்றி கடுகதிப் பாதைகளுக்கு மண் விற்பனை செய்வதன் மூலம் ரூபா 81,134,631 இற்கான வருமானமொன்று பெற்றிருந்ததுடன், குளங்கள் செயற்திட்ட அறிக்கையின் படி வழங்கப்பட்ட மண்ணிற்காக குறிப்பிட்ட விவசாய அமைப்புக்களினால் சபைக்கு பணம் பெற்றுக்கொண்டு அந்தப் பணம் அரச ஏற்பாடுகளுடன் பயன்படுத்தி சிறிய குளங்களை முறையான நியமத்தில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தன் பொறியியல் ஆலோசனையின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செய்யாமல் கிடைத்திருந்த பணத்தில் ரூபா 76,085,636 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்திருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | முறையான நியமத்தின் படி சிறிய குளங்கள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பொறியியல் ஆசோசனையின் படி அபிவிருத்தி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஆண்டின் போது தனமல்வில பண்ணையில் காணப்படும் சாகினி குளத்தின் பகுதியொன்றினை புனரமைப்பதற்காக ரூபா 500,000 இற்கான முற்பணமொன்று கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வழங்கியிருந்த போதிலும், அந்தக் கருமம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக தீர்ப்பொன்று வழங்கும் படி கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அறிவித்ததுடன், மீண்டும் புதிதாக புனரமைப்பு மேற்கொள்ளும் முறை தொடர்பாக வேலைத் திட்டமொன்று எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் என கூறப்பட்டது. | குளத்தை புனரமைத்து பண்ணையின் பயிர்ச் செய்கைகளுக்காக நீர் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) இனால் 2022 திசெம்பர் மாதத்திற்கான சம்பள உறுதிச் சீட்டினை பரிந்துரைக்கப்பட வேண்டிய போதிலும், காரணமொன்று சுட்டிக் காட்டாமல் அவ்வாறு பரிந்துரைக்கப்படாமை தொடர்பாக 2023 பெப்ரவரி 15 திகதி முதல் அந்தப் பெண் உத்தியோகத்தர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டு ஆளாக்கி ஒரு வருடத்திற்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் ஆரம்ப விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) தொடர்பாக ஆரம்ப விசாரணை அறிக்கையின் படி விடுதலைக்கான காரணத்தை வினவும் கடிதத்திற்கு பதிலாக அந்த பெண் உத்தியோகத்தரினால் இரண்டு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன், அதன்மூலம் விசாரணை அறிக்கையின் பிரதியொன்று மற்றும் உரிய விசாரணைக்குரிய தகவல்களை கேட்டிருந்தார். | ஆரம்ப விசாரணையை விரைவாக பூர்த்தி செய்து சிக்கல் தீர்க்க வேண்டும். |
| (ஈ) | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் புதிய கரமெடிய குளம் புனர்மைப்பதற்கு 2017 செப்தம்பர் 25 திகதி சிரமசக்தி விவசாய அமைப்பினால் ரூபா 1,693,200 இற்கான வைப்புத் தொகையொன்று சபைக்கு செலுத்தியிருந்ததுடன், மொத்த மண் கியுப் எண்ணிக்கையும் அகற்றியிருக்காமையால் ரூபா 1,594,480 இற்கான தொகையொன்று போதியளவு சான்றுகள் ஏதும் இன்றி குறிப்பிட்ட விவசாய அமைப்பிற்கு செலுத்தப்படாமல் 2023 மார்ச் 13 திகதிய ஏ.ஆர்.சி. பிரதீப் எனும் நபருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | கரமெடிய குள விவசாய அமைப்பினால் வைப்புச் செய்யப்பட்ட தொகையில் குளத்தில் இருந்து அகற்றப்பட்ட மண் எண்ணிக்கை தவிர விவசாய அபிவிருத்தி ஆணையாளரின் உறுதிப்படுத்தலின் படி அகற்றப்பட்ட 3000 மண் கியுப்கள் தொடர்பாக பணம் தடுத்து வைக்கப்பட்டு சிரமசக்தி விவசாய அமைப்பு சார்பில் அந்த கருமத்திற்காக பணம் வைப்புச் செய்திருந்த நபரான ஏ.ஆர்.சி. பிரதீப் இற்கு செலுத்துமாறு அந்த விவசாய அமைப்பின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாலாரினால் எழுத்துமூலமாக சீல் அடிக்கப்பட்டு அடையாள அட்டைகளின் பிரதிகளுடன் உறுதிப்படுத்தப்பட்டு சபைக்கு அறிவிக்கப்பட்டது. அதன்படி, ரூபா 1,594,480 தொகை செலுத்தப்பட்டது. அதேபோல், அதற்குரிய விவசாய ஆய்வு உத்தியோகத்தரினாலும் அது உறுதிப்படுத்தப்பட்டது. விவசாய | வைப்புத் தொகை உரிய தரப்பினருக்கு மாத்திரம் செலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அமைப்புக்களுக்கு இந்தக் கருமத்தை நடாத்திச் செல்வதற்கு பணம் காணப்படாமையால் இந்த பிரதேசத்தில் காணப்பட்ட வள பங்களிப்பாளர் இந்த குளத்தை தோண்டும் அலுவல்களுக்காக பணம் வைப்புச் செய்தல் மற்றும் அந்த கருமம் மேற்கொள்ளப்பட்டதென சபையின் செயற்திட்டப் பிரிவின் உத்தியோகத்தர்களும் அறிந்த விடயமாகும். | |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 16 ஏக்கர்களைக் கொண்ட அரச அனுமதிப்பத்திரதார தனமல்வில காணியொன்றில் அமைந்துள்ள குளத்தை புனரமைக்காமையால் திட்டமிடப்பட்ட பயிர்ச்செய்கை செயற்திட்டங்கள் மேற்கொள்வதற்கு மற்றும் பண்ணையை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கும் முடியாமல் இருந்தது. 2020 ஆண்டின் போது அந்த நிலப் பகுதியில் ரூபா 600,000 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த சேதனப் பசளை தயாரிக்கும் கட்டிடமும் எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். தனமல்வில பண்ணையின் இந்தக் கட்டிடம் தற்போது சாண உரம் உற்பத்தி செய்யப்பட்டு அவை தெஹிவல மற்றும் நரஹேன்பிட கன்று நாற்றுமேடைகளுக்கு இந்த சாண உற்பத்தி 2 லீற்றர் மற்றும் 5 லீற்றர் தொகை விற்பனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்த உற்பத்திக்கு கூடிய நுகர்வோர் கேள்வியொன்று காணப்படுகின்றது. | கட்டிடங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 10 ஏக்கர்களைக் கொண்ட அரச அனுமதிப்பத்திரதார புத்தள காணி எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டதுடன், 2021 ஏப்ரல் 05 திகதி முதல் சபையின் பெயரை பயன்படுத்தி உடன்படிக்கையொன்று இன்றி தனியார் தரப்பினர் ஒருவரால் பாத்திரக் கலவை உற்பத்தி செய்து வினியோகிக்கும் தொழில் முயற்சியொன்று நடாத்தப்பட்டு வருகின்றது. | ஏற்றுக்கொள்கின்றேன். மேலதிகச் செலவு கிரயத்தில் கூடிய சதவீதம் அந்த ஊழியரின் சம்பளம் மற்றும் வேதனங்களுக்காக செலவிடப்பட்டதுடன், சேதனப் பசளை உற்பத்தி, செய்திட்டத்தின் மேற்பார்வையில் மற்றும் பாதுகாப்பில் பாத்திர கலவைகள் மேற்கொள்ளப்பட்டு நாரஹேன்பிட மற்றும் தெஹிவலை கன்று விற்பனை நிலையங்களுக்கு விற்பனைக்காக வினியோகிக்கப்படுகின்றது. | பண்ணை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | கலங்குட்டிய அரிசி தயாரிப்பு நிலையத்தில் காணப்படும் இயந்திர கொள்திறன் ஒரு மணித்தியாளத்திற்கு 1,000 – 1,200 | கலங்குட்டிய அரிசி தயாரிப்பு நிலையத்தின் உற்பத்திகள், விற்பனை தெஹிவல விற்பனை நிலையத்தினால் மாத்திரம் | வளங்கள் உச்ச அளவில் பயன் கிடைக்கக்கூடியவாறு திட்டமிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிலோ நெல்லினை அரிசியாக மாற்றக் கூடியதாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 28,580 கிலோ கிராம் மாத்திரம் அரிசாக மாற்றப்பட்டிருந்தது. இந்த அலகில் செயற்படு நிலையில் காணப்பட்ட 06 இயந்திரங்கள் மற்றும் அரிசி மா உற்பத்திப் பிரிவில் செயற்படு நிலையில் காணப்படும் 05 இயந்திரங்கள் 2022 ஆண்டு முதல் விளைவற்று காணப்பட்டதுடன் இயந்திரங்களை நவீனமயப்படுத்தல் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படல், வெளி நிறுவனங்கள் அல்லது சபையில் பதிவு செய்த முகவர் நிலையங்களின் மூலம் கிடைக்கும் கட்டளைகள் வரையறையாக இருந்தமையால் பாரியளவில் நெற்கொள்வனவு மேற்கொண்டிருக்கவில்லை. மேலும், இந்த தயாரிப்பு நிலையத்தில் மேற்கொள்ளப்படுவது பாரம்பரிய நெல்லினை அரிசாக மாற்றுவதாக காணப்படுவதுடன், கேள்விக்கு ஏற்ற வகையில் கொள்வனவு செய்வதற்காக பராம்பரிய நெல் இருப்பு காணப்படாமையும் உற்பத்தி குறைவதற்கு காரணமாக இருந்தது. | |
| (ஈ) | சபையினால் கால்நடை உணவுக்காக சோளம் இறக்குமதி அமைச்சரவையின் மற்றும் உணவுக் கொள்கை குழுவின் அங்கீகாரம் இன்றி தனியார் இறக்குமதியாளர் ஒருவர் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த இறக்குமதிக்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.2.2 (அ) இற்கு இணங்க பெறுகை அறிவித்தல் குறைந்தளவு தேசிய பத்திரிகையொன்றில், தேசிய பெறுகை முகவராண்மையின் இணயதளத்தில், ஏனைய தொடர்புடைய இணையதளம் ஒன்றிலோ வெளியிடப்பட்டிருக்கவில்லை. 2023 ஆண்டில் சபைக்கு கிடைத்திருந்த இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் கீழ் இரண்டு தனியார் கம்பனிகளினால் இறக்குமதி செய்யப்பட்ட 8,484,036 கிலோ கிராம் சோளம் சபையின் குறுக்கீடுகள் ஏதும் இன்றி விற்பனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதி அமைச்சின் மூலம் உணவுக் கொள்கைக் குழுவின் பரிந்துரைக்கு 2023 ஆண்டிற்கு தேவையான சோளம் இறக்குமதி செய்வதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன்படி, 200,000 மெட்ரிக் தொன் சோளம் இறக்குமதி செய்வதற்கு அனுமதி கிடைத்திருந்தது. ஜனாதிபதி செயலகத்தினால் விவசாய அமைச்சு செயலாளருக்கு சோளம் இறக்குமதிக்காக அனுமதி கோறியிருந்த Tulip நிறுவனம் குறிப்பிட்ட இறக்குமதி அலுவல்களை மேற்கொண்டிருந்ததுடன், அதற்காக 24/0449/612/012-1 அமைச்சரவை குறிப்பின் மூலம் 03 நிறுவனங்களின் கீழ் இறக்குமதி செய்வதற்காக அனுமதி பெற்று 2023 ஆண்டில் இறக்குமதிக் காலம் 2024-03-20 இடையிடையே நீடிக்கப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட பணம் தற்போது பெறப்பட்டுள்ளது. | சபைக்குக் கிடைத்திருந்த இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதிகளை முறைப் பிரகாரம் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த 13 செயற்திட்டங்களில் 08 செயற்திட்டங்களுக்காக ரூபா 9,095,302 இற்கான தேறிய நட்டமொன்று பெற்றிருந்தது. | தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்த அந்த நட்டத்தினை குறைப்பதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. தெஹிவலை விற்பனை நிலையம், பாரம்பரிய அரிசி செயற்திட்டம், புத்தல பண்ணை, தனமல்வில பண்ணை, இடியப்ப மா செயற்திட்டம் அக்ரோபிரேஷ் வத்தளை, RTS பான உற்பத்தி மற்றும் தோசை மா உற்பத்திச் செயற்திட்டம் என்பன நட்டமடைந்துள்ளன. | நட்டத்தை குறைக்கக் கூடிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |